**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**IA 1/2022 IN OS.NO.22/2022**

| | | |
|---|---|---|
| **NAME** | : | மூர்த்தி |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 15.11.2022.**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் தங்கையிடமிருந்து ரூ.1 லட்சம் பணம் வாங்கிக் கொடுத்தேன். பாண்டில் நானாகவே செல்லு வைத்துக்கொண்டேன் என்றால் இல்லை. அவர்கள்தான் வைத்தார்கள். அந்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளேனா என்றால் ஆமாம். பிரதிவாதிகளுக்கு எத்தனை வழக்கறிஞர்கள் மூலமாக நான் நோட்டீஸ் அனுப்பியுள்ளேன் என்றால் 3 வழக்கறிஞர் மூலமாக 3 முறை நோட்டீஸ் அனுப்பியுள்ளேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் வட்டியைப் பற்றி நான் எதுவும் கூறவில்லை என்றால் சொல்லியுள்ளேன். வரவு வைக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் பெயர் தெரியவில்லை. சாட்சி கையெழுத்து யார் யார் போட்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். சீனிவாசன், ரவி ஆகியோர். அவர்கள் ஒவ்வொரு கையெழுத்துதான் போட்டார்கள். பாண்டு சம்பந்தமாக நான் எஸ்.பி.ஆபிசில் ஒரு புகார் கொடுத்தேன். புகாரின் பேரில் இரண்டு பேரையும் அழைத்து விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம்தான் அந்த ஆவணம் என்றால் சரி. அது எ.ம.த.சா.ஆ.3,4. இது பொய்யான வழக்கு என திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்றால் இல்லை. பிரதிவாதிகள் எந்த பாண்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் நானே இந்த பாண்டை தயார் செய்துகொண்டேன் என்றாலும் சரியல்ல. இந்த பாண்டில் பிரதிவாதிகள் கையெழுத்தே போடவில்லை என்றால் சரியல்ல. எந்த வரவும் வைக்கவில்லை என்றாலும் நான் பொய்யாக ஆவணம் தயார் செய்து கொண்டேன் என்றாலும் சரியல்ல. நான் கடன் கொடுத்த விவரங்களையும், வட்டி விவரத்தையும் நான் வழக்கிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்திருந்தால் அந்த பணத்தை குறித்து

........2

கணக்கு வைத்திருப்பேன் என்பதால் நான் பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சொத்தை விற்கமாட்டேன் என அன்டர்டேக்கிங் கொடுத்துள்ளார்கள் என்றால் சரி. நான் பொய்யான ஆவணம் தயார் செய்து பணம் பறிக்க வேண்டுமென வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.